சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.219/2025

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – கிரிவாசன் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதிகள் தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 23.02.1950 ம் தேதியிட்ட தபசு சொத்திற்கு அழகர்நாயக்கர் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** . 26.10.2018 ம் தேதியிட்ட தபசு சொத்திற்குரிய SLR நகல் ( தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டது) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 2.** 08.10.2016 ம் தேதியிட்ட O.S.No.111/2016 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட Settlement Memo சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 3.** 08.10.2016 ம் தேதியிட்ட O.S.No.111/2016 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட Lokadalat Decree சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 4.** 10.04.2018 ம் தேதியிட்ட தபசு சொத்து குறித்து பெருமாளுக்கு 1ம் பிரதிவாதியும் இருந்து வந்த அறிவிப்பு ஜெராக்ஸ் ( அசல் W.P.(M.D) No.9081/2018 ல் தாக்கல் செய்யப்பட்டது) **வா.சா.ஆ 5**. 03.01.2018 ம் தேதியிட்ட மேற்படி 10.04.2018 ம் தேதியிட்ட அறிவிப்பினை Quash செய்திட

பெருமாள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்திருந்த ரிட்மனு W.P.(M.D) No.9081/2018 ல் கடந்த 03.12.2018 ல் ஏற்பட்ட உத்தரவு நகல் **வா.சா.ஆ 6**. 04.06.2018 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு பட்டா வழங்கி உத்தரவாக வேண்டி 1, 2 வாதிகளின் தந்தை பெருமாள் மற்றும் இருவர் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் செய்திருந்த ரிட்மனு W.P.(M.D) No.1062/2018 ஏற்பட்ட உத்தரவு அசல் **வா.சா.ஆ 7**. 25.09.2019 ம் தேதியிட்ட 1, 2 வாதிகளின் தந்தை பெருமாள் தாவா சொத்திற்கு அவரது பெயரில் பட்டா வழங்கிட வேண்டி 4ம் பிரதிவாதியிடம் கொடுத்த மனு மற்றும் ரசீது கை நகல் **வா.சா.ஆ 8**. 04.07.2023 ம் தேதியிட்ட 1ம் வாதிக்கு 3ம் பிரதிவாதியிடமிருந்து வந்த குறிப்பாணை அசல் **வா.சா.ஆ 9**. தாவா சொத்தின் தற்போதைய நிலையயை எடுத்துக்காட்டக்கூடிய புகைப்படங்கள் (5 எண்ணம்) அசல் **வா.சா.ஆ 10**. 16.11.2020 ம் தேதியிட்ட 1, 2 வாதிகளின் தந்தை பெருமாளின் இறப்பு சான்று கணினி நகல் **வா.சா.ஆ 11**. பெருமாளின் வாரிசு சான்று கணினி நகல் **வா.சா.ஆ 12**. 1ம் வாதியின் ஆதார் கார்டு ஜெராக்ஸ அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **வா.சா.ஆ 13.** 2ம் வாதியின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் **வா.சா.ஆ 14**. 3ம் வாதியின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் **வா.சா.ஆ 15**. O.S.No.242/2018 வழக்கின் தீரப்புரை நகல் **வா.சா.ஆ 16**. O.S.No.242/2018 வழக்கின் ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் நகல் **வா.சா.ஆ 17**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.